ஓம் சற்குருவே நம:

நல்லதங்காள் என்னும்

இயற்பெயருடைய

# நற்குலசேகரி சரிதை.

(முதல்பாகம்.)

இஃது

ஆலந்தூர் ஹிந்து பால விவேகதாயினி சபையின்

உபாத்தியாயர் ம-ா-ா-ஸ்ரீ பண்டித சிக்ரகவி

தி. சுப்பராய முதலியாரவர்களால்

இயற்றியதை,

ஆலந்தூர் ஒரிஜனல் டிராமாடிக் கம்பெனியை

மானேஜ்மெண்டு செய்துவந்த ம-ா-ா-ஸ்ரீ அயன் ராஜபார்ட்

தி. முருகேச நாயகரவர்கள்

அயன் ஸ்திரீபார்ட்

மனமோகன அரங்கசாமி நாயுடவர்கள்

பாடி வருவதுடன்!

ஷை கம்பெனியில் சமஸ்தபார்ட் தரிக்கும்

மனமோகன ரஞ்சிதமென்னும்

எம். ஆர். எஸ். ஸ்ரீநிவாச ஐயரவர்களால்

அநேக நூதனகாயன வசனங்களும் சேர்த்து

சி. வே. துரைசாமி முதலியார்

அவர்களது

சென்னை குளூ

பெரியநாயகியம்மன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1924. [அணா 4.

ரிஜிஸ்டர் காப்பிரைட்.

O-,892 MSM,N
M29
184085

## பார்வதி அண்டு கம்பெனி,
34, ஆண்டியப்ப நாய்க்கன் தெரு, சூளை மதராஸ்.

---

5½ - முழ நீளம் 2½ - முழ
அகலமுள்ள

### அசல் ஜப்பான் பட்டு குட்டைகள்.



நாகரீகமும் அழகும் வாய்ந்த இந்த நவீன பட்டுகுட்டை வேண்டியவர்கள் இச் சமயத்தில் நாளைப் போக்காமல் இன்றைக்கே எழுதுங்கள் செலவழிந்து விட்ட பின் 10-ரூபாய் கொடுத்தாலும் இப்படிப் பட்டகுட்டை கிடைப்பது அரிது.

மிகவும் நேர்த்தியான பளபளப் போடும் கூடிய பட்டினால் செய்யப் பட்ட இக்குட்டைகளை சிரசில் சுற்றிக் கொள்ளவும், துப்பட்டாக்களாகவும், ஸ்ரீகள் மேலாக்காகவும், சிறுபெண்கள் தாவணியாகவும் உபயோகிக்கலாம்.

இதில் பச்சை, வெள்ளை, சிகப்பு, வெண்சிகப்பு, ரோஸ், ஊதா, நீலம், மஞ்சள், மேகவர்ண முதலிய பலரகங் கள் உண்டு

குறைந்த விலை குட்டை 1-க்கு ரூ. 3½

### சர்வதேள் விஷ நிவாரண சஞ்சீவி.



ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்க வேண்டிய முதன்மையான ஔஷதம். தேள், கட்டுவாக்கலி, செய்யான், பாம்பு, எலி முதலியவிஷங்கள் இரண்டு நிமிஷத்தில் பறக்கும். இது அநுபோகமுள்ள கைகண்ட மருந்து,

இரண்டு மருந்து பாக் 1-க்கு அணா 8

---

“ இராஜேஸ்வரி”

### கூந்தல் வளரும் தைலம்.



இத்தைலம் சிறந்த வனமூலிகைகளினால் சாஸ்திர முறைப்படி தயார் செய்யப்பட்டது. சிறந்த வாசனையும், கூந்தலை நீளமாக வளரச் செய்யும் அபாரசக்தியும் இதற்குண்டு. சகல விதரோகங்களையும், கண்களில் நீர்வடிதல், மயக்கம், கண்ணெரிச்சல் முதலிய வியாதிகளையும் அடியோடு நீக்குவதன்றி சரீரத்திற்கு ஆரோக்கியத்தைக் கொடுக்கும்.

டின் 1-க்கு விலை ரூபா 1 0 0

### நரைமயிர் கருக்குந்தைலம்




இத்தைலம் இதற்கு முன் அநேகரால் விற்கப்பட்டு வரும் பலவித கப்புகளைப்போன்றதல்ல. மயிரைச் செம்பட்டையாகவும், கம்பல் நிறமாகவும் மாற்றி விகாரப் படுத்தும் குணம் இத்தைலத்தில் கிடையாது. நரைத்த மயிருக்கு இத்தைலத்தைப் பூசிய 5-நிமிஷங்களுக்கெல்லாம் கருமைநிறத்தையும் பளபளப்பையும் உண்டாக்கும். வயோதிகரை வாலிபரைப்போல் தோற்றுவிக்கும். உபயோகிக்கும் விதம் பார்சலும் அனுப்பப்படும்.

பாக்கெட் 1-க்கு ரூபா 1 0 0

ரூபாவதி அல்லது சிதம்பர சாமியார் :—இஃது ஓர் இனிய செந்தமிழ் நாவல் படிப்போரின் மனக்கவலையும் கஷ்டமும் பறந்தோடும். விலை அணா 0 12 0

உ

ஸ்ரீ சொக்கநாதர் துணை.

## நல்லதங்காள் என்னும்

இயற்பெயருடைய

# நற்குலசேகரி சரிதை.

---

### சுந்தரகணேசர் துதி.

இராகம் - நாட்டை, தாளம் - ஆதி.

சுந்தரகணநாதா ஓம்
சுமுகாயாஹயா சூர்பகர்ணாயா (சுந்)
பந்தபாசமதை பற்றறச்செய்வாய்
பார்வதிசுதா பங்கஜபாதா (சுந்)
சங்கரன்பயின்ற ஐங்கரனும்புவி
எங்கும் நிறைந்தவனே
இங்குமெங்கும்நீர் இன்னலின்றி காத்தருள்வாய்
துங்ககஜமுகனே துதிக்கும் நித்தியசுதனே (சுந்)
மெய்ப்பொருளும்நீயே தற்பரனும்நீயே
சித்பரனும் நீயே
அற்புதம்சேர்சித்தி அன்னைவல்லபைநேசா
சுப்பராயன்பணி சுத்தப்ரணவமணி (சுந்)

### அம்பாள் துதி.

ஆசகியேன் என்ற வர்னமெட்டு.

காத்தருள்வாய் அம்பா
கருக்கடியில் அமர்ந்திலகும்
காஞ்சிமாக்ஷேத்திர காவலியே அம்பா
சித்தமிலாதுந்தன் சேபரைக்கண்பார்ப்பாய் (கா)
குறைதீர்ப்பாய் கல்விசேர்ப்பாய்
சிறந்த ஞானப்பால் வார்ப்பாய்
சாற்றும்பீஜாக்ஷரி சாமுண்டிவீரி
தோற்றும்பொருள்களில் துலங்கும்மாரி (கா

வேதபரம்பரி விமலியேசீலி
க்ருபாலி திரிசூலி வேண்டுவோர்க்கனுகூலி
மாதவன்சோதரி மகிடசம்மாரி
பேதமின்றி எம்மை என்றுமன்னைப்போல்
சற்பரணி சந்திரசேகரி சிவசங்கரி நிரந்தரி
பொல்லாதசத்ருக்களின் வைரி
ஒப்பிலாப்ரணவ ஓங்காரி
சுப்பராயன்போற்றும் சுகந்தரியே அம்பா (கா)



மதுராபுரி தர்பார் சீன்.

இராமலிங்கப்புலவர் போற்றி கவி.

வேதிவாகும் மறைகள்நான்கும் போற்றிசெய் திவ்யக்ஷேத்ர
மதுரைவாழ் சொக்கநாதா மலர்பாதம் போற்றிபோற்றி.

வசனம்.

சதுர்வேதங்களும் புகழ்ந்துரைக்கும் சாக்ஷாத்சங்கரன் நம்மை காக்கக்கடவது.

மந்திரி வசனம்.

எத்திசையிலும் கீர்த்திவாய்ந்த ஏந்தலே பிரதான் சமீபத்திலிருக்கின்றேன்.

அரசன் வசனம்.

சந்தோஷம் அமருவீர் அமாத்யசிகாமணி.

மந்திரி வசனம்.

சித்தப்படி வீற்றிருக்கின்றேன் வேந்தர்பிரானே.

அரசன் வசனம்.

மந்திரி! இம்மதுராபுரியில் தெய்வபக்தி மறையவர் யாகாதி கிருத்யங்கள், க்ஷத்திரியருடைய வீரபராக்கிரமம், வைசியருடைய வியாபாரத்தின் விஷயங்கள், சூத்திரருக்குள்ள அடக்கம், தான தர்மங்கள் முதலிய சமஸ்தகார்யங்களுடைய விபரமும் பலதரம் தம்மால் சரிவரகேட்டிருக்கின்றேன் தாமிருக்கும்வரையில் யான் அதை அனேகமுறைகேட்பது உசிதமாகக் காணப்படவில்லை. ஆதலால் அதுகள்யாவும் தாம் நன்றாகவே கவனித்து வருகிறீரென மதிக்கின்றேன் ஆதலால் தம்மைகேட்க மனமில்லையாக்கும்.

மந்திரி வசனம்.

தாம் உரைத்தவாரே யாவும் சரிவர நடந்துவருகிறது ப்ரபு.

அரசன் வசனம்.

ஆனந்தம் மனமிக மகிழ்ந்தேன்.

மந்திரி வசனம்.

அவனியோர்க் கதிபதியாகிய அன்பரே இன்று தம்முடைய திருவதனமானது மிகவும் கிலேசசாகரத்தில் மூழ்கியதுபோல் பின்னமாயிருக்குங் காரணம்யாது அதுயான்கேட்க ஆவல்கொண்டேன் தேவரீர் உரைத்திடில் அதற்கொவ்விய பிரத்வத்திரம் செய்ய தாசன் காத்திருக்கின்றேன் ஆதலால் அறைகுவீர் அரசே.

(அரசன் வசனம்.) ஆனால் கேளும்.

## அரசன் தரு.

ஆதியில் நான் என்னபழி என்ற வர்னமெட்டு.

எனிந்தஜன்மம் எடுத்தேனோ     இன்னலுறனேன் சம்போ
மானிலத்தில்மைந்தனில்லா     மலடனென்றயேசுவாரே (எ)

வ-ம். அமாத்ய சூடாமணி இம்மேதினியில் யான் உற்பவித்து போகத்திலுள்ள சமஸ்த சுகதுக்கங்கள் அனந்தகோடி தானதர்மங்களைச் செய்தும் என்ன பலன் கடைசிகாலத்தில் யான் பதவி அடைந்து முக்தி அடையச் செய்யத்தக்க ஏகபுத்திர சந்ததியில்லாமல் போய்விட்டதே என்செய்வேன்.

தெய்வதூஷணைசெய்தேனோ என்ன     திங்கிழைத்தேனோயுயர்
சைவசமயம்கடந்தேனோபொய்யை     சாதித்தேனோஅநீதமாக (எ)

வ-ம். இன்னமும் யான் ஏதேனும் தெய்வதூஷணையாகிலும் மதானுசார தர்மங்களிலாயினும் விசேஷ அசத்தியமான வார்த்தைகளையாகிலும் சொல்லி முன்னே சொன்னதுபோல் செய்திருப்பேனோ அந்தோ.

அந்தணரைவைதேனோயில்லை     அருமுனிகளைநொய்தேனோ
எந்தவுயிரையிம்சித்தேனோ இம்மையிலதனால்மனிதமரமானேன்

வ-ம். மேலும் வேதியரை வைதிருப்பேனோ முனிபுங்கவருடைய மனதை நோகவைத்தேனோ எந்த ஜீவஜந்துவையாகிலும் இம்சித்தேனோ இதில் ஏதோ ஓர் காரணத்தால்தான் இத்தரணியில் தனிமரமானேன் விதியே தவிரவும்.

தழைத்தோங்கும்சந்த்ரகுலத்தில்     தனையனில்லையோபொல்லா
பிழைகளென்னசெய்தேனோயிந்தபி றப்பில்நானேபாவியானேன் (எ)

வ-ம். இச்சந்திரகுலத்திற்கு இத்துடன் நசிப்புவரும்போலிருக்கிறதே பொல்லாத பாதகத்தொழில் ஏதேனும் செய்ததினால் தான் இப்பிறப்பில் மலடனாகினேன் மந்திரி.

பொது வசனம்.

மித்திரரே இத்தனை கிருத்தியங்களில் இதுதான் செய்திருப்பேனென்று என்புத்திக்கு எதுவும் எற்படவில்லை ஆதலால் இதற்கு பரிகாரம் என்னசெய்யலாம் ஏதேனும் யோசித்து ஓர் தகுதியான மார்க்கம் காட்டவும் அப்படிக்கில்லாவிடில் இந்த பிராணத்தையே போக்கிக்கொள்ளலாமென கருத்து மந்திரி.

மந்திரி வசனம்.

ப்ரபு! லோகமெல்லாம் கடவுளாதீனம். அக்கடவுள் மந்திரத்தால் பிரசன்னமாகக்கூடியவர். அம்மந்திரங்களுக்குகர்த்தா அந்தணரானதால் அம்மறையவரை அழைப்பித்து அவரிடம் தம்முடைய குறைகளைத் தெரிவித்து அதற்கவர் எவ்விதம் விடைபகருகின்றனரோ அவ்விதம் செய்யில் நம் எண்ணம் பின்னமின்றி திண்ணமாக சம்பூரணமாகுமென்றறிவீர் கோவே.

அரசன் வசனம்.

அப்படியா ஆனால் அந்தண சிகாமணிகளை அதி துரிதமாய் வரவழைப்பீர்.

மந்திரி வசனம்.

சித்தப்படி அழைப்பிக்கின்றேன்.

மந்திரி சேவகனுக்கு உத்திரவுகொடுக்க மாடவ்யன்
வேதியரை அழைத்துவந்து தர்பாரில்விடுதல்.

அரசன் மந்திரி வசனம்.

சுவாமிகள் நமஸ்கரிக்கின்றோம் வத்ஸர்கள் ஆசனங்கொள்வீர்.

அந்தணர் வசனம்.

தீர்க்காய்ஷியாபிரஸ்து சீக்கிரமே சுஜீவபுத்ரா புத்திரிவாப்திரஸ்து ஆசீர்வாதம் மகாராஜரே மந்திரி ப்ரபு தாங்கள் அமருவீர்கள் யான் அமருகின்றேன்.

அந்தணர் அமர்ந்து அரசனை கேட்குதல்.

பூபனே தாம் என்னையழைப்பித்த சந்தர்ப்பத்தை கவனித்திடில் என்னிடம் ஏதோ உரைப்பதற்கென்றே யோசிக்கின்றேன் எனக்கும் அனேக சுபலட்சணங்கள் காணுகின்றது கொண்ட எண்ணமும் முடியுமென மதிக்கின்றேன் இருந்தாலும் எக்கருத்தை அறிக்கையிட அழைத்தீர்.

அரசன் வசனம்.

வாமனகுலதிலகரே புத்திரசந்ததிக்கு தகுதியான எதுவும் அறிந்துக்கொள்ள தம்மை கவனித்தேனுக்கும் தகுதியான பதில் புகல்வீர்.

அந்தணர் வசனம்.

இவ்வளவுதானே வேந்தபிரானே கடவுளை நம்பினோர் கைவிடப்படார் ஆதலால் நீர் உம்முடைய சுபத்தினியுடன் அடவிக்குச் சென்று அன்புடன் அரனைக்கோரி அருந்தவஞ்செய்திடில் அகத்பம் ஆதிமூலர் அருள்கூர்ந்து சந்தானபாக்கியம் தந்தருள்வார். மேலும்

ஏகமனதுடன் மசியின்மீதில் ஏகபாதத்துடன் நின்று கடூரதபம் புரியவேண்டும் கட்டாயம் கேசேயன் உம்முடைய எண்ணம் பூர்த்திசெய்வார்.

அரசன் வசனம்.

பாக்கியம் சித்தம்போல் சென்றுவருகின்றேன் நமஸ்காரம்.

வேதியர் தட்சணைபெற்று செல்லுதல்.

அரசன் மந்திரியிடம் நகரை ஒப்பிவித்து செல்லுதல்.

## இந்திராணி அந்தப்புரம் சீன்.

இந்திராணி தனி வசனம்.

என் பிராணபூபதியின் பரமனுடைய பூஜைக்காக வேண்டிய சுவாசனமலர்களும் பூஜைபாத்திரங்களும் மற்றவை யாவும் சகிகளால் சேகரப்படுத்தி யிருக்கின்றேன் இன்னமும் என் மன்னவர் வாராதகாரணத்தைக் குறித்து மனக்கிலேசமாகிறது.

இந்திராணி சேவகனிடம் சொல்லும் வசனம்.

ஆரடா! துவாரபாலகன்.

சேவகன் வசனம்.

மாதுஸ்ரீ என் யாது விசேஷம்.

இந்திராணி வசனம்.

என் பிராணபதி வந்தவுடன் முன்பாக நீ எனக்கு அறிக்கை செய்வாய்.

(சேவகன் வசனம்.) சித்தம்போல் மகாபாக்கியம்.

## இராமலிங்கப்புரவலர் பிருப்தம்.

அரசன் வசனம்.

காவலனே அந்தப்புரத்திற்கேக சமயமெப்படி.

காவலன் வசனம்.

கவனித்துவருகிறேன் வேந்தே.

சேவகன் வசனம்.

அம்மணி மன்னவர் துவாரத்தருகில் வந்திருக்கின்றனர். தம் சித்தம்போல் தெரிவிப்பதற்கு வந்தேன்.

இந்திராணி வசனம்.

அப்படியா இதோவந்தேன்.

பொது வசனம்.

இந்திராணி அர்க்கியபாத்திர பூசை முதலியது முடித்து பர்த்தாவை அழைத்துவந்து ஆசனத்தில் அமரச்செய்தபின்

அரசன் வசனம்.

மனதிற்கிசைந்த மங்கையே நம்மிருவருக்கும் புத்திர சந்தானமில்லாததால் யான் அந்தண சிரேஷ்டரைக்கொண்டு விசாரித்ததில் அன்னவர் உன்னையும் என்னையும் மரவுரிதரித்து கானகஞ்சென்று சிவன்மீது ஏகசித்தத்துடன் கடுந்தவம்புரியும்படி திட்டஞ்செய்ததினால் யான் அப்படியே செய்யக்கருதி இராச்சிய காரியங்களை மந்திரியிடம் ஒப்புவித்து உன்னிடம் வந்தேன் இதற்குன் மனோபீஷ்டமெப்படி தெரிவிப்பாய்.

இந்திராணி வசனம்.

ஆசைக்குகந்த அன்பரே லோகத்தில் விரதம் தெய்வம் பர்த்தாவாதலால் கணவனுடைய சித்தப்படிக்கு நடப்பதுதான் பதிவிரதா பாவையர்கட்கு அடையாளம் ஆதலால் தமதிஷ்டம்போல் நடக்க தாசி கார்த்திருக்கின்றேன்.

அதி துரிதமாக மரவுரிதரித்து என் பின்பற்றி வருவாய். உமதிஷ்டம்போல் இதோவருகின்றேன்.

## இருவரும் ஏகோபித்து கானகம்புக்கி தவம்புரிதல்.

## பரமன் பார்வதியுடன் பிராப்தம்.



பரமன் வசனம்.

ஹே! மதுரைக் கிறைவனுகியமன்னனே உங்களிருவருடைய மனதிடமான தவத்திற்கு மனமகிழ்ந்தேன் எச்சருத்தைக் கொண்டு கடோமான தவம்புரிகின்றீர் தெரிவிப்பீர்.

இராமலிங்கர் விருத்தம்.

அய்யனேசொக்கநாதா அமரர்கள்போற்றும்பாதா
துய்யனேஉம்மையல்லால் துணையெனக்கெவருமில்லை
மையலாள்கண்டாவெந்தன் மதிகுலம்செழிப்புற்றோங்க
வையகந்தனிலேபுத்ர வரமதையளிப்பாய்போற்றி.

வசனம்.

நீலகண்டமுடைய நிமலரே நமஸ்காரம் மேதினியில் என் குறையைத் தீர்க்கவல்லவர் தாமன்றி வேறிலர் அதலால் என்மதி குலம் விருத்தி அடையும்பொருட்டு எனக்கு புத்திரசந்ததி ஆகும் படி வரமளிப்பீர் பரமரே.

பரமன் வசனம்.

சந்தோஷம் உனதிஷ்டம்போல் என் அனுக்கிரஹத்தினுல் நல்லண்ணன் நற்றங்கையென்றும் ஆண் பெண்ணுமாக இரண்டு குழவிகள் ஜனிப்பார்கள் அவர்களால் நீ க்ருதார்த்தமடைவாய் இதோ என் ஆசிர்வாதம். யான் அந்தர்த்தியானமாகின்றேன்.

இந்திராணி வசனம்.

மாசிலாமணியே மனமகிழ்ந்தேன் அனந்தகோடி வந்தனம் யானும் இல்லறத்திற்கு செல்லுகின்றேன்.

பரமன் வசனம்.

சென்று வருவாய்.

இராஜன் தரு.

என்னபுண்ணியஞ் செய்தோம் நாம்
இகபரசுகம்பெற பெரும்பாக்யம்
பன்னரும்பரம னனித்தச்சேய்களால்
பெண்ணேயிந்த்ராணிநாம் பிரீதியாய்வளர்ப்போம்வாராய்
எந்தன்கண்ணேயினி புத்திரகலியைத்தீர்ப்போம் சீராய்
விண்ணேர்பணிந்தேத்தும் மிசனைநம்பினுல்
மண்ணில்நமக்கென்றும் மனத்துயரேது (என்ன)

## இராமலிங்கர் நாடடைந்து புத்திரபுத்திரிகளால் மனமகிழ்ந்து தர்பாரில் தோன்றி நல்லன்னனுக்கு விவாகஞ்செய்ய ஆலோசிப்பது.



அரசன் வசனம்.

மந்திரி என் வத்சனுக்கு எவ்வனம் சம்பிராப்தமானதால் அன்னவனுக்கு தகுதியான நாயகி குந்தள தேசத்து பூபதியின் குமாரத்தி அலங்காரிபென்னும் கன்னிகையை மணம்புரிவித்து இப்பட்டணதகை அவனுக்கு மகுடாபிஷேகஞ் சூட்ட ஆலோசித்திருக்கின்றேன் உமதிஷ்டமெப்படியோ உரைப்பீர்.

181085

மந்திரி வசனம்.

மகாராஜா அப்யந்தரம் என்ன மெத்த சந்தோஷம் அப்படியே செய்யலாம்.

அரசன் வசனம்.

ஆனால் அமைச்சரே குந்தளபூபதிக்கு இச்சேதிகளை வரைந்து திருமுகமனுப்பி மற்றுமுள்ளவருக்கும் தெரிவிக்கும்படி திட்டஞ் செய்து என்பிரிய புத்திர ரத்னத்தை இந்த அதி துரிதத்தில் வரவழைப்பீராக.

அரசன் வசனம்.

அப்படியே வேந்தே.

நல்லதம்பி தோன்றி வந்தனஞ் செய்தபின் புரவலர் வசனம்.

இராஜன் வசனம்.

தவத்தாலுதித்த தனயா தற்காலமெனக்கு விர்தாப்பியம் சம்பிராப்தமானதால் உனக்கு மணமுடிக்க ஆவல்கொண்டதுந் தவிர இம்மேதினியை உனக்கு மகுடஞ்சூட்டி நீ அரசுசெய்வதை யான் ஆனந்தமாக என் நேத்திரத்தால்காண ஆவல்கொண்டவனுகி சமஸ்தமும் ஏதபாடு செய்துமுடிக்க உத்திரவு தந்துவிட்டேன் இதற்கு மனோபாவமெப்படி புகல்வாய்.

நல்லதம்பி வசனம்.

பிதா உமதெண்ணம்போல் நடக்க தாசன் காத்துக்கொண்டிருக்கின்றேன்.

அரசன் வசனம்.

ஆறல்மந்திரி என்புத்திரனை அந்தபுரத்திற் கழைத்துச்சென்று மங்களஸ்நானம் முதலியவைகளை முடித்து ஆடையாபரணம் யாவுந் தரிக்கச்செய்து அபிசிக்கிரம் யாவரையும் விவாகமண்டபத்திற் கழைத்துவர திட்டஞ்செய்யும்.

மந்திரி வசனம்.

அப்படியே பிரபு!

அரசன் வசனம்.

பிரதான் வரக்கூடிய ஒவ்வொருவருக்கும் தகுதியான உபசாரங்கள் செய்து அவரவர்களை விவாக மண்டபத்திற் கழைத்துவர தூதர்களுக்கு ஆக்ஞாபிப்பீர்.

மந்திரி வசனம்.

சித்தப்படி செய்கின்றேன்.

அரசன் வசனம்.

குந்தளபூபதியுடன் நெரிவித்து தன் குமாரத்தியை மணக்கோலத்துடன் மணப்பந்தலுக்கு அழைத்துவரும்படி யான்சொன்னதாகவுரைத்து நீயிருந்து அழைத்துவாரும் யான் அந்தப்புரத்திலுள்ள காரியங்களை கவனிக்கிறேன்.

பொது வசனம்.

யாவரும் மணமண்டபஞ் சேர்ந்து விவாக முடித்தானபின் மகுடஞ்சூட்டி தனதிருப்பிடஞ் சென்றுவிடுதல்.

### இராமலிங்கர் வசனம்.

குழந்தாய் சந்தோஷித்தேன் கொண்டயெண்ணம் இன்றுதான் நிறைவேறியது ஆனந்தம் ஆனால் இப்போது உனக்கு சம்பூர்ண மானகாலம் வந்திருப்பதால் யான் கானகஞ்சென்று பிசனை கருதவேண்டும் இனி உன் தங்கையிருப்பதினால் அவளை உன் கண்ணினுள் மணியைப்போல் பாதுகாத்து அவளுக்கிசைந்த மணாளனைத்தேடி மணமுடிப்பாய் அவர்மனதுகோர்ந்திடில் இச்சமஸ்தானமே பாழடைந்துவிடும் இதோ உன்கரத்தில் ஒப்பிவைத்தேன் வேறுயானுனக்கு தெரியாதது என்ன சொல்லப்போகின்றேன் குழந்தாய் அலங்காரி உன் நாத்தியென இவளை பாவிக்காதே உன் கர்ப்பத்தில் ஜனித்த குழந்தைபோல் மதித்து பாதுகார்ப்பாய் ஜாக்கிரதை சென்று வருகின்றேன்.

### பொது வசனம்.

யாவருக்கும் நந்நீதிகளை யுரைத்து அன்னவர்களால் உபசாரங்கள்பெற்று இராமலிங்க புரவலநும் இந்திராணியும் கானகஞ்சென்றுவிட்டபின் நல்லண்ணன் தர்பார் தேசவிசாரணை முடித்து பின் சொல்லுதல்.

### நல்லதம்பி வசனம்.

அமாத்தியசூடாமணி என் தங்கை குலசேகரிக்கு தகுதியுள்ள பூமான் காசிபூபன்தான். ஆதலால் அன்னவரை இங்கழைப்பித்து இருவருக்கும் பாணிக்கிரகண முடிக்க இஷ்டத்துடனிருப்பதால் தாம் அந்தக்ஷணமே விவாகத்திற்குரிய சமஸ்தகாரியங்களும் கொஞ்சமேனும் தவறிடாமல் சித்தஞ்செய்வீர்.

### மந்திரி வசனம்.

மகராஜா அதேவிதம் பாவத்தும் சேகரப்படுத்திவிடுகிறேன்.

### பொது வசனம்.

சமஸ்த அரசரும் காசிமன்னனும் யாவரும் மணமண்டபத்தில் வந்திருக்க குலசேகரியும் அலங்காரியும் மற்றுமுள்ள பரிவாரங்களுந்தோன்றி காசிமன்னனுக்கு குலசேகரியை மணமுடித்து ஆசீர்வதிக்குதல்.

## நல்லதம்பி சீதனம் கொடுக்குதல்.



### சீதனம் கொடுக்கும் தரு சாவேரி ஆதி.

பெற்றுக்கொள்ளுவாய் தங்கையே பிரீதியுடனே
பெற்றதாய்தந்தைப்போல் பிரீதியாய்நான்கொடுக்கும்
உற்றபொருளனைத்தும் உள்ளங்குளிர்ந்தின்றுநீ (பெ)

கரிபரிகளுடனே களரும்கிள்ளுக்கும்
பரிந்துவேலைசெய்ய பாங்கிமார்களையும்
வரிசைப்படிதருவேன் வளப்புடையதங்கையே (பெ)

உரியபொன்னணிஆடை உலகத்தவர்கள்மெச்ச
அரியசீதனங்கள் அளவிலாமலீந்தேன்
அனைத்துமுனக்கேசொந்தம் மனக்குறையுண்டோயின்னம் ()

### நல்லதம்பி வசனம்.

அருந்தங்கையே இதுவரைக்கும் உன்னை கண்ணினுள் மணியைப்போல்பாவித்து பாதுகாத்துவந்து இப்போதுனக்கு மணம்முடித்து நீ களிக்குமாறு உன்தந்தையார் உனக்குப்பிரீதியாய் கொடுப்பதுபோல் இவ்வரிய சீதனங்கள் தந்தனம் இன்னம் ஏதாகிலும் உனக்கு வேண்டியவைகளை உனதிஷ்டம்போல் எடுத்துச் செல் அம்மா.

### குலசேகரி வசனம்.

அண்ணா நீர் தந்த சீதனங்களினாலேயே குதூஹலமானேன் இருந்திடினும் இதுகாலம் உம்மை அரைக்ஷணமும் பிரியாதவன் இப்போது,

கலியாணமானவுடன் நல்லதம்பிக்கும் குலசேகரிக்கும் தர்க்கம்.

மதனமணாளனே யென்ற வர்னமெட்டு.

குல எப்படிநான் அகலுவேன் என் அண்ணவே
நல் இப்படிநீ துயருருவ தேற்காது என்பிறவி
குல தந்தைதாய் போல்வளர்த்தீர் தமையனேவும்மைவிட்டு
எந்தவிதம்பிரிந்திருப்பேன் அண்ணவே
நல் அடிக்கடி நான்வருவேன் அரிவையே கவலையேனோ
குடியிற்பிறந்தபெண் கண்ணீர்விடலாமா
குல காலும்எழவில்லையே காசினகருக்கேக
கலங்குதேனேதங்கை அண்ணவே
நல் கலங்குவதழகல்ல கல்யாணஞ்செய்துகொண்டு
நலமுடன் சென்றுவருவாயே தங்கா.

குலசேகரி வசனம்.

உம்மைவிட்டகல மனமும் வரவில்லை மேலும் என்னை மாதா பிதாவைப்போல் பாதுகார்த்து வந்தீர் செல்லலாமெனில் என் கால்களும் எழவில்லைஇதனால்என்மனமும் கலங்குகின்றது அண்ண.

நல்லதம்பி வசனம்.

தங்கா குலசேகரி கலியாணஞ்செய்துகொண்டு இப்படி சோகிப்பது தகாது நீ மைத்துனருடன் சென்றபோதிலும் உனக்கு அங்கு யாதொரு குறைவுமில்லை. மேலும் யான் அடிக்கடி அங்கு வந்து உன்னை கண்டுவிட்டு வருவேன் உன் கண்ணிலிருந்து ஜலம் விடாதே அப்படி விடில் எனக்கது தீது ஆதலால் சந்தோஷத்துடன் சென்று வருவாய்.

குலசேகரி வசனம்.

சித்தப்படியே.

பொது வசனம்.

அலங்காரியின் பொறுமையான வார்த்தைகள் சேஷ்டைகள் முதலியதும் உலகசாம்பிரதாயம்போல் மீறாமல் நடிக்கலாம்.

நல்லதம்பி வசனம்.

மைத்துனரே தாம் என் தங்கையை பாதுகார்க்குந் தன்மை இனிதான் பார்க்கப்போகிறேன் இதுவரைக்கும் அன்னவளை யான் என அக்ஷியைப்போல் மதித்துவந்தேன் இப்போது உமது கரத்தில்

ஒப்பி, வைத்தேன் ஜாக்கிரதையாக அவளை ரக்ஷித்து அவள் மனத்திற்கு எவ்விதமான சோகமுமில்லாமல் சந்தோஷத்துடன் சதிபுருஷாள் காலங்கழிக்கக் கடவீர்.

காசிபன் வசனம்.

அப்படியேசென்றுவருகிறேமெனவிடைபெற்றுச்செல்லுதல்.

பொது வசனம்.

காசிமன்னன் குலசேகரி காசிநகர்க்கேகி இருவருக்கும் ஏழு மைந்தர்கள் உற்பவித்தபின் நகரத்தில் பன்னிரண்டு வருடமாய் மாரியில்லாததினால் பஞ்சம் அதிகரித்து குடிகள் சோகித்து இராஜ்யம் விட்டு வேறுயிடஞ் செல்லுதல்.

நல்லதங்கை ஏழு மைந்தருடன் அந்தப்புரத்தில் விசனிக்குந் தரு.

நீதிநெறியுணர்ந்த என்ற வர்னமெட்டு.

பாச்சிசோச்சியென்று பசியால்வருந்துகின்ற பாலர்களே
பஞ்சநமக்குற்றதே பாரிலெவ்விதமுய்வோம் பாலர்களே
காசிநகரில்வாழுங் கனத்தகுடிபடைகள் மைந்தர்களே
கடும்பசியால்வாட காலமும்வாய்ந்ததே மைந்தர்களே

உங்கள்யேழ்வரைஉற்றுபெற்றதந்தை மைந்தர்களே
உண்ணுமமுதுக்காக வூரெங்குஞ்சுற்றுறார் மைந்தர்களே
இங்கெவர்கள்நம்மை இனிதாய்ஆதரிப்பார் மைந்தர்களே.

நல்லதங்கை வசனம்.

குழந்தைகளே உம்முடைய துரதிஷ்டத்தால் நகரத்தில் மாரியின்றி பஞ்சமதிகரித்ததால் குடிபடைகளும் மற்றுமுள்ள தனவந்தர்களும் தாம் ஜீவிக்கும்பொருட்டு இந்நகரைவிட்டு வேறு பிரதேசங்களுக்குச் சென்றுவிட்டனர் யாமுமிருந்த ஆடையாபரண பூஷணங்களையும் விற்பனை செய்தாய்விட்டது இனி பிழைக்க வகையுமில்லை உங்களை பாதரித்த தந்தையும் பலவிதமான ஹேதுக்களை செய்தும் உஜ்ஜீவிக்கும் மார்க்கம் இன்னதென்று ஏற்படவில்லை வெளியில் சென்றிருக்கும் மன்னவரும் இன்னமும் வரவில்லை ஏ ஜெகதீசா இதுவும் உன் செயலோ எம்முடைய வினைதசையோ அறிகிலோம்.

## காசிமன்னன் பிராப்தம்.

### ஆர். கோவிந்தசாமி நாயுடு—காசிமன்னன்.

அரசன் வந்தவுடன் பத்தினியும் புத்திரர்களும் ஒருவருக்கொருவர் ஆலிங்கனஞ் செய்துக்கொள்ளுதல்.

பிறகு அரசன் தன் பத்தினியைக் கண்டு சொல்லுதல்.

அடி கண்மணீ தற்காலம் இராஜ்யத்தில் மாரியின்றி,

அம்மம்மா இது தர்மமா என்ற வர்னமெட்டு.

பொல்லாப்பஞ்சம்வந்துற்றதால் பூவையேபிழைப்பதெப்படி
தொல்லுலகந்தன்னிலே தோகையேமார்க்கம்சொல்லடி.

அரசன் வசனம்.

பொல்லாத பஞ்சம் வந்ததனால் நகரிலுள்ள யாவரும் வேறு யிடங்களுக்கு உஜ்ஜீவிக்கச் சென்றுவிட்டனர். இனி யாம் எப்படி பிழைப்பது இதற்கு என்புத்திக்கு ஒன்றும் பார்க்கும் எம்படவில்லை நீ எதாகிலும் தகுதியான யோசனை சொல்வாய் கண்மணி.

### ஏ. பாலாமணி—குலசேகரி.

குலசேகரி தரு.

அண்ணனிடஞ்சென்றுவாரேன் ஆதிப்பொருள்கொண்டுவாரேன்
எண்ணிதுயர்கொள்ளவேண்டாம் இப்போதேவிடை தருவீர்.

வசனம்.

பிராணபதி சோகங்கொள்ளாமல் எனக்கு விடையளித்திடில் யான் என் தமையரிடஞ்சென்று ஜீவிக்க வேண்டியபொருளை கொணருகின்றேன் சஞ்சலம்விட்டு நல்விடைதாரும்.

காசிமன்னன் தரு.

தாழ்வுவந்துற்றதனால் தமயன்வீடுபோகப்போகாது
கேழ்ப்பாயான்சொல்லும்சொல்லை கேட்டிடில்தீமைசேராது

காசிபன் வசனம்.

நம்முடைய வாழ்வுகாலந்துறந்து இத்தாழ்வு வந்தபடட தருணத்தில் எவர்களுடைய கிருகத்திற்கும் போகப்படாது. என சொல்லைத்தடுப்பது தர்மமல்ல.

குலசேகரி தரு.

என்னவார்த்தைதெரிவிக்கின்றீர் என்னரும்துரைசிங்கமே
என்னைதடைசெய்யவேண்டாம் இக்ஷணமேசென்றுவாரேன்.

வசனம்.

என் சகோதரனுடைய விடுதிக்கு எப்படிக்கேகிடினும் தோஷமில்லை. தாம் இதைக்குறித்து இவ்வளவாக என்னைவருத்துவது எனக்குக் கவலையாக யிருக்கின்றது சீக்கிரம் விடையளிப்பீர் இத்தருணமே சென்று வருகின்றேன் பிராணபூபதி.

காசிமன்னன் வசனம்.

மாதரசே கேள்.

காசிபூபனுக்கும் குலசேகரிக்கும் தர்க்கம்.

இராகம் கானடா, தாளம் ஆதி.

சரிதானேயிது என்ற வர்னமெட்டு.

காசிமன்னன் தரு கண்ணிகள்.

குலமணியேயிந்த கொழுனன்சொற்றடிப்பது
குவலயத்திலுன்னைப்போல் கோதையருக்கடுக்காது
புல்லாகிலும்விற்று பூவையேயாம்பிழைப்போந்
தொல்லுலகந்தன்னிலே தோகையேகாலங்கழிப்போம்.

காசிமன்னன் வசனம்.

அடி குலத்தை உத்தரிக்கவந்த குணவதியே நாம் புல்சுமந்து விற்பனைசெய்தாகிலும் இன்னகரத்தில் யாவரும் ஒன்றாகவேயிருந்து ஜீவிப்போமடி. மேலும் உன்னைப்போலொத்த உத்தம ஸ்திரீகள் கொண்ட கணவன் வார்த்தையைமீறி நடக்கலாமா அது மண்டலத்திலுள்ளவர் உன்னை பதிசொல் தவிர்த்த பாதகியென வசமாட்டாரோ.

ஐயையோ நான்பாவி கல்பனுயென்ற வர்னமெட்டு.

பூமுடிக்குங்கூந்தலிலே புல்சுமக்கக்காரணமோ
பூமிபுகழ்என்துரையே புகல்வதென்னஞாயம்மாயம்.

குலசேகரி வசனம்.

காதலரே அனேக வாசனையுள்ள புஷ்பங்களும் சந்தனாதித் தைலங்களும் தடவி கோதிமுடித்த இக்கூந்தலின்மீது புல்சுமக்க எப்படித்தான் மனந்துணியும் அக்கஷ்டத்தையும் யான் அனுபவித்தும் அறியேனே தாம் எல்லாமறிந்த வல்லவராயிருந்தும் இப்படிச்குப் புகல்வது ஏதோ மாயமாகத்தானிருக்கின்றது.

காசிபன் தரு.

விறகாகிலும்ஒடித்து விலைக்குவிற்பனைசெய்தோம்
தரணியில்தனயரை நான்பாதுகாத்திடுவோம்.

காசிபன் வசனம்.

விறகாகிலும் ஒடித்து சுமைகட்டி சுமந்து வீதியில் விற்று அதில் வரும்பொருளால் இத்தரணியில் யாம் பிரியாமல் தனயரை பாதுகாப்போம் சந்திரமுகி நீ மாத்திரம் போகாதே.

குலசேகரி தரு.

வேர்முடிக்குங்கூந்தலிலே விறகெடுக்கவிதிவசமோ
பார்வேந்தேசென்றுவாரேன் பரிவாய்விடைதாரும்தாநும்.

குலசேகரி வசனம்.

தவிரவும் கைத்தொழிலாகிலும் செய்வோமெனினோ,

தரு.

சந்தனத்தைக்குழைக்குங்கையால் சாணைத்தட்டவூழ்வினையோ
மைந்தர்முகம்பார்க்கவேண்டும் மனக்கிலேசமென்னுமன்னு.

குலசேகரி வசனம்.

மன்னவரே சதாகாலமும் கோரியபடி சுகத்தையனுபவித்திருந்ததென்றால் எக்காரியமும் செய்பமுடியாது. அப்படி செய்ப எத்தனித்தாலும் முடியவும் முடியாது அல்லது பலவிதமாய் செய்த போதிலும் பிரஜைகளும் நகைத்து ஏளனஞ்செய்யமாட்டாரோ நமக்குத் தெரியாதது யாது ? கவனிப்பீர்.

காசிமன்னன் தரு.

எந்தநகர்க்காவது ஏகிபிட்சையெடுத்து
மைந்தர்பசியைத்தீர்ப்போம் மகிழுடன்நான்கொடுத்து

காசிபன் வசனம்.

சந்திரவதனி வேறு பிரதேசமாவது ஏகி பிச்சையெடுத்து மைந்தரின் குட்சிபாதையைத் தீர்த்து ரக்ஷிப்போமடி என் வார்த்தையைமீறி நடவாதே.

## காசிபூபன் சொல் தரு தர்க்கம்.

ஏதேசமுன்னாண்டேவாரு என்ற வர்னமெட்டு.

காசி. என்சொல்லைபெண்ணேநீ தள்ளாதே
இந்நகரைவிட்டுநீ செல்லாதே — என்

குல. என்னை தடைசெய்வதென்ன நாதா
இக்காசியையாளும் மன்ன நீதா — என்

காசி. வருமைவாய்ந்தாலென்ன மாதே நீ
வனிதையேசென்றால் வரும் தீதே — என்

குல. வருமையாலல்லவோ நாதா
இவ்வனிதை செல்லமுயன்றேன் நீதா — என்

காசி. தொல் லுலகந் தன்னில்தானே ஏதேனும்
தொழில்செய்து பொருள்கொணருவேனே — என்

குல. பொல்லாதகாலத்தால் நானே இன்று
போகும்படிநேர்ந்ததே கோனே — என்

## அடவி சீன்.

(யாவரும் பிரயாணப்பட்டு வரும்போது துற்சகுனங் காணுதல்.)



## காசிபூபன் தர்க்கம்.

சூரியன் சபையிலென்ற வர்ணமெட்டு.

கண்மணி அதோ கவனி.

காசிபன்.

ஐயையோ அவசகுனம் ஆரணங்கேஆகுதுபார்
மெய்யாகநீசென்றிடில் மோசமாகுமென்றேனிதோ

குலசேகரி.

வையகந்தனிலிதெல்லாம் பொய்யானசகுனமாகும்
மெய்யென்றுகருதிநீவிர் செய்கின்றீர் என்னதடை

காசிபன்.

பூனைகுறுக்காகுது புதுப்பானைஎதிராகுது
மானேநீசெல்வதனுல் மனமும்மிகநோகுது.

குலசேகரி.

பூனைகுறுக்கானுலென்ன புதுப்பானைவந்தாலென்ன
கோனேமனக்கவலை கொள்ளவேண்டாம்விடைதாரும்

காசிபன்.

ஆந்தையும்அலறுது அக்கினிசட்டியும்வருது
சிந்தைமிகநொந்துயின்று சோகமுமிகமீறுது

குலசேகரி.

வரும்வினையை விலக்கவசமாமோ
வருந்துதல்வருேநல் விடைதாருந் சென்றுவாரேன்
என்துரையேமனக்குறையேன் விரைவில்வந்துவிடுவேன்.

காசிபன் வசனம்.

பிரியசுந்தரி நாம் இல்லறம்விட்டு புறப்பட்டு இதுவரைக்குங் கண்டதெல்லாம் தீதானசகுனங்களன்றி வேறல்ல. இத்தருணத்தில் நீ இவ்வேழுமைந்தருடன் தனியாகக் காட்டில் புகுந்து சகோதரன் விடுதிக்கேகுவது உசிதமன்று. ஆதலால் பிரயாணத்தை நிறுத்தி விடு.

குலசேகரி வசனம்.

என் சற்குணநாதரே லோகத்திலுள்ள ஜீவராசிகள் தனக்குள்ள காரியங்களை கவனிக்கின்றதேதவிர, நமக்கு துன்பம் வருமென்றறி

ந்து இவ்விதமாக செய்கின்றதோ இவைகளுக்கேற்பட்ட தொழிலை பார்க்கவேண்டியது தானே. இதுகளையெல்லாம் தாம் கவனித்து சோகித்து என்னைத் தடுப்பது தர்மமல்ல நாதா.

காசிமன்னன் விருத்தம்.

எண்ணருங்கண்ணே கேளாய் எண்டிசைமாதர்தம்மில்
சன்மார்க்கசந்திரவதியும் சரிதமயந்திதானும்
நண்பன்சொல்மீறினரோ நங்கைஅநுசூயைமுன்பு
என்மொழிநீதடுத்து வருவதடாதுபெண்ணே.

வசனம்.

ஆதியில் பதிவிரதா சிரோன்மணிகளாகிய சந்திரவதி தமயந்தி அனுசூயை இப்பேர்ப்பட்ட புண்ணியவதிகளெல்லாம் பதியின் வாக்கை சிரசாவகிக்கவில்லையா? நீ அதை சம்பூர்ணமாய் அறிந்திருந்தும் என் வார்த்தையை நிராகரித்துப்போவது நன்கல்லடி. சொல்வதைக் கேள். மேலும் கேடுவரும் பின்னே மதிகெட்டுவரு முன்னே என்பதுபோல தீர்க்காலோசனை செய்யும் உன்மதி, எக்கெடுதி சம்ப்ராப்தமாவதை முன்னிட்டு இவ்விதம் பாழடைந்ததோ அறிகிலேன். ஆனால், நீ கட்டாயம்போகத்தான் வேண்டுமோ? என் துயரத்தை யாரிடம் தெரிவித்துதான் ஆற்றுவேன். உனக்கும் மைந்தருக்கும் அன்புடன் உபசரிப்பவர் அங்கு யார்தானிருக்கின்றார். என் சோகம் உன்னிடம் சொல்லவும், உன் விபாகூலம் என்னிடம் உரைக்கவும் இப்படி யாவரும் ஒருவருக்கொருவர் அனுசரித்து இப்பஞ்சத்தைத் தொலைத்துவிட்டலாமெனக் கருதினேனே! தனியாய் என்னை விட்டகல உனக்கு மனம் எப்படி துணிகின்றதோ? குலசேகரி! மைந்தர்களைப் பத்திரமாய்ப் பாதுகார்க்கவேண்டும். ஏதனும் மனத்துயருடன் தாழ்வான சொற்கள் ஏதாகிலும் வந்திடில் உன்னை என் கடகத்தினுல் வீசி எறிவேன். ஜாக்கிரதை. பத்திரமாய்ச் சென்றுவா. குழந்தைகளே! அன்னைசொற்றள்ளாமல் அன்புடன் அதிதுரிதத்தில் வந்து என்னைப் பார்ப்பீர். சென்று வருவீர்கள். ஆ கண்மணி! கல்ப்ராண்!

## குலசேகரி சென்றவுடன் காசிபூபன் சோகம் என பூமியில் விழுந்தவுடன் தரு.

காசிபூபன் தரு தன்யாசி திரிபுடை

போருளேநல்லதங்கா புத்திரருடனே அதோ தனியாக — போ
பாறுதுளமேதுசெய்வேன்
மண்ணினில்எவ்விதமுய்வேன் ஜகதீசனே — போ

அறுதிப்போல் பாவையிப்போது எந்தன்
ஏழுமைந்தருடனே அம்மாதா
கணமாய்சென்றிவருந்ததி செய்யும்தயாநிதி
மனவாட்டமின்றியென்றும் மாதைகார்ப்பாய் போ

பொது வசனம்.

ஜகதீசா வென் பிரியபத்தினியும் மைந்தருந்தனியாய் செல்கின்றாராதலால் ஏ விஸ்வநாதா அவர்கட்குயாதொரு துயரின்றி நீதான் பாதுகார்க்கவேண்டும்.

காசிராஜன் தரு என்சொற்றடுக்காதேநீ யென்ற வர்னமெட்டு.

தனியாமாய்நின்றேனே
தயாபராதுயரானேனே தனி

இனிஎந்தன்மைந்தர்களை என்றுநான்காண்பேனையோ
என்செய்குவேன் எவரைநொய்குவேன் எவ்விதமுய்வேன்
மன்னனெவ்விதமிருப்பேன் மைந்தரேழ்வரைவிட்டு
மங்கையைவிட்டுயிங்கு புண்பட்டு தங்கினேன்கெட்டு தனி

வசனம்.

அந்தோ இனி எதுசெய்யவும் யான் அசக்தன் மாதுமைந்தர்களும் மறைந்தனர் யானும் செல்லுகிறேன்.

மைந்தருடன் கானகத்தில் குலசேகரி விசனிக்கும் தரு.

பாதாம்புயத்திற்கு கல்பனு வென்ற வர்னமெட்டு.

மார்க்கமெதுவோநான் காணேன் இங்கு
மாதவனேஒன்றும் தோணேன் மார்

சீர்குலந்தேனே சிவனேநின்செயல்தானோ
கரர்க்கக்கடனில்லையோ கதிதப்பிநான்வந்தேன் மார்

செல்வமாய்வளர்த்த சேயருடனேநான்
கல்லும்முள்ளும்நிறைந்த காட்டுவழிவந்தும் மார்

வசனம்.

ஏ விசாலாக்ஷி இவ்வடர்ந்த காட்டகத்தில் வந்து கல்முள்களால் துயரடைந்து பாட்டையும் தெரியாமல் தவிக்கவும் காலம் வாய்ந்ததே என் செய்குவேன்.

காட்டில் குலசேகரி இவ்விதம் சோகித்திருக்கும் தருவாயில் மதுரையில் நல்லதம்பிக்கு சொற்பனம் ஏற்படுதல்.

### தி. முருகேச நாயகர் — நல்லதம்பி.

அந்தபுரம் நல்லதம்பி சயனித்தெழுந்து

### அலங்காரியிடம் சொல் தரு.

ஜாலஞ்செய்வேனோ என்ற வர்னமெட்டு.

தன்யாசி ரூபகம்.

என்னமோசம் வருமோ ஈசா
என்னசெய்வேன் சொக்கேசா
பன்னும் காசிநகரில் மிக்க
பஞ்சகாலம் வந்துற்றதே (என்)
அதனாலென்தங்கை அனைத்துமிழந்து
அனாதிப்போல் மைந்தருடனே
மதியும்கலங்கி மனமும்தியங்கி
மன்னனைப்பிரிந்து மங்கையும்வந்தாள் (என்)

வசனம்.

காதலி அலங்காரி இவ்விதமான சொற்பனத்தைக் கண்டேன். இதனால் எவ்விதமானதீங்கு தனக்கு ஏற்படுமோ அறிகிலேன் எதற்கும் ஈசனே காக்கக்கடவர். ஏ தயாநிதியே! என் மைத்துனரையும் தங்கை குலசேகரியையும் மைந்தர்களையும் யாதொரு கஷ்டமின்றி பாதுகாக்கவேண்டும் சொக்கநாதா.

### மனமோகன அரங்கசாமி நாயுடு—மூளி அலங்காரி.

அலங்காரி வசனம்.

பிராணபதீ! கனவோ நினைவோ எனப் புகல்வார்கள். ஏதோ பித்தம் மேலீட்டால் பலவிதமாக நித்திரையில் காண்பது வழக்கந்தான். அதைக்குறித்து இப்படித் துயருறலாமா? பயித்தியம்! உமது தங்கைக்கு ஒருபோதும் எக்குறைவும் ஏற்படாது. வியாகூலத்தைவிட்டு எழுந்திருப்பீர் வேந்தே!

நல்லதம்பி வசனம்.

சந்தோஷம் அப்படியே.

### சேவகன் பிராப்தம்.

சே. அரசபிரானே சேவகன் நமஸ்காரம்.

நல். ஆசீர்வாதம் என்னை விசேஷமாக வந்தனை அறைகுவாய்.

சே. குடிகளிட்ட பயிர்களை மிருககூட்டங்கள் அழித்ததாக குடிகள் முறையை உம்மிடம் உரைக்கவந்தேன்.

நல். அப்படியா ஆனல் வெகுசீக்கிரமாக சைனியத்தை சேகரப்படுத்து. யான் ஆயுதபாணியாய் வருகிறேன்.

பொது வசனம்.

மூளியிடம் விடைபெற்று செல்லுதல்.

181085

### நற்றங்கை கானகத்தில் அரக்கனைக்கண்டு பயப்படுதல்.

காம்போதி - கல்பறொப்பு, நல்லதங்கை - தரு.

0-1892

என்னசெய்வோமடா மக்களா
எதிரிலோராக்கன் எமனைப்போல்வாருனே (என்)
மன்னன்சொல்தடுத்ததால் இன்னமெது வாய்க்குமோ
பிசாகாசிவிஸ்வேசா என்னையாளும்சொக்கேசா (என்)
பயங்கொள்ளவேண்டாமடா எந்தன்பாலகரே
நம்மைபரமன் கார்த்தருள்வார் (என்)
அபன்விதிபோலாகும் யாரென்னசெய்யக்கூடும்
இயங்கொள்ளாதீர்கள் தெய்வம்நம்மைக்கார்க்கும் (என்)

குலசேகரி அரக்கனைக்கண்டு பயந்து சொல்லும் வசனம்.

ஆ! காசிநாதா இவ்வரக்கன் எந்த கருத்தைக்கொண்டு இவ்வளவு ஆடம்பரத்துடன் வருகின்றனோ தெரியவில்லை.

அரக்கன் வசனம்.

ஹே! ஸ்திரீயே இப்போது உன்னையும் உன் மைந்தரையும் என்பசிதீர புசிக்கப்போகின்றேன் என்னதெரிவிக்கின்றாய்.

குலசேகரி வசனம்.

ஐயா அரக்கனே எம்மை புசிப்பதினல் உனக்கு என்ன பிரயோஜனம் நீ வேறு ஆகாரத்தை இச்சிக்கப்படாதா எம்மை புசிக்க விரும்பாதே.

அரக்கன் வசனம்.

அடி பெண்ணே உங்களைவிடேன் இத்தருணம் உங்கள் எட்டு பேரையும் சாப்பிடில்தான் என்பசி தீரும் ஆதலால் விடமாட்டேன்.

குலசேகரி வசனம்.

இவன் நம்மை விடமாட்டான் ஆகையால் நாம் இவனை தண்டிக்க ஈசனைத்துதிக்கலாம்.

குலசேகரி கவி.

கடவுளேஓரரக்கன் கர்ஜித்துவருகின்றானே
உடலளித்திவன்தானிங்கு உயிரினைநீக்கவேண்டும்.

வசனம்.

ஏ! பரம்பொருளே யான் என்பதிக்கேற்ற பாவையாயின் அன்னிதம்புரியவந்த இவ்வரக்கன் இச்சமயம் மடியவேண்டும்.

கிஞ்சித்துதூரம் வந்தவுடன் அரக்கன் மடியுதல்.

சர்ப்பத்தைக்கண்டு சோகிக்கும் தரு.

விதியோ காலகெதியோ என்ற வர்னமெட்டு.

சிவமேபாழும்பாம்பு சீறிவருகின்றதே
செப்வதென்ன நான்காசி (சிவ)

பாவமேதுசெய்தேன் பாலகரைக்காப்பாய்
பாவையான்வேண்டுரேன் பாருங்கடைக்கண்ணால் (சிவ)

வசனம்.

ஆபத்பாந்தவா அநாதியைப்போல் அலையும் எம்மை இந்நாகம் துரத்துகின்றதே என்செய்வேன் காக்கக்கூடிய கண்ணியனுமிங்கில்லையே.

வேடன்தோன்றி சர்ப்பத்தைதுண்டித்து பலாத்சரிக்குதல்.

குலசேகரி தரு.

மன்னுதடையென்னு என்ற வர்னமெட்டு.

தகுமா அண்ணுதகுமா
இந்தநங்கை மருவதர்மமாகுமா (தகு)

அகமுருகினேன் அல்லலிலாழ்ந்து
அண்ணன்விடுசெல்லும் அடியாளைபுணா (தகு)

தனிவழியாய்வந்த என்னை
தமையனே பெண்டுக்கழைக்கலாமோ (தகு)

அனியாயத்திற்கு ஆளாகாதீர்
அவனியிலீது பெரும்பாபமன்றே (௩௫)

வசனம்.

அண்ணா இது உமக்குத்தகாது அன்யமாதரை சகோதரிகளைப் போல் பாவிக்கவேண்டியதைவிடுத்து, இப்படியென்னை அடுக்கா காரியத்திற்கழைப்பது பாதகமாச்சுதே அதனால் உமக்கு மதிகதோஷம் விளையுமாதலால் அக்கருத்தைக் கொள்ளாதீர், வீணாய் மூடமதியால் கெடாதீர்.

வேடன் வசனம்.

நீ எவ்வளவு நன்னீதிகளை உரைத்திடினும் உன்னைவிட்டகலேன்.

குலசேகரி வசனம்.

இவனுக்கு நாம் பலதரம் உரைத்தாலும் விடேனென்பதாகத் தெரிவிக்கின்றான் தீனதயாளா.

நல்லதங்கை வேடனை சபிக்கும் கவி.

அந்தமாகயென்னை அழைக்குறான்மருவவேடன்
இந்நிலமீது நியால் எரிந்திடவேண்டும்பாவி.

பொது வசனம்.

வேடன் எரிந்து சாம்பலாகுதல்.

வசனம்.

அடா! மைந்தர்களா வேடன் மடிந்தான் இப்போதுவந்த விபத்துகளெல்லாம் விமலனால் நிவர்த்தியாச்சுது இனி நாம் மாமன் வீடு செல்வோம் வருவீர்.

பிள்ளைகள் வசனம்.

அன்னையே அப்படியே வருகின்றோம்.

குலசேகரி வசனம்.

அதோதெரிகின்றது அதுதான் உங்கள் மாமன் வீடு.

## மூளியின் சகி பிராப்தம்.

நம் மகாராஜருடைய தங்கை அவர்கள் தன் புத்திரசமேதராய் வருகின்றார் நாம் நம் எஜமானியிடம் உரைக்கலாம்.

மாளிகையில் மூளி அமர்ந்திருக்குதல்.

அந்தப்புரம் சீன்.

தரு - இராகம் - பார்சி, தாளம் - ஆதி.

ஸோஹி கரி ரங்கரலியாம்
சால பலியா
ஸப ஸகி யனமே புல் புல்
ப்யாரிகு லோஷனமே
சமகஹாச ஸகியஜாரி
சமக்கதமக்க நாரீ
குஷிகுஷி டலமலபயினமே
க்யாரேநமக் கட்டாரி
நாச்ச தையா தையா தைய தத் தத்தத்தா
பூலோகுங்குரு சும் சும் சும் சும்
சையாக்குஷி கேதுல
கலியந்துக் குரிபுல
கலியா உதரதத் தக்க (சோ)

சகி வசனம்.

அம்மணி உமது நாத்தி அவர்கள் மைந்தருடன் வருகின்றனர் தாயே.

மாடிமீதிருந்து மூளி நல்லதங்கையைக் காண்பது.

மூளி வசனம்.

எங்குடி ஐயையோ இவள் ஏன் இப்போதிங்கு வரவேண்டும்.

அலங்காரி தரு.

இராகம் - இந்துஸ்தானி - பைரவி, தாளம் - ஆதி.

அவள்தான் அவள்தான் அவள்
அதோவருகின்றனள்
அடிவயற்றினில் தீமூட்டி (அவ)

இவளைக்கண்டபோ தென்மனம்
ஏக்கமும் மிகவாகுது
கவர்ந்துச்செல்ல வருகின்றாளோ
காதகி கடுகெனவே (அவ)

காசிநகரைப் பாழ்ப்படுத்தி
கனத்தசெல்வத்தையுந்துறந்து

வேசிப்போல யிங்குவந்து
வேண்டும்பொருளைத் தான்பறிக்க (அவ)
நாரியிங்கு வாராமுன்னம்
நங்கையே தாக்ஷண்யமின்றி
துரிதமுடன் கபாடத்தை
தாளிட்டுக் கொண்டுவாபோடி (அவ)

வசனம்.

படுபாவி சக்களத்தி இங்கு எதற்காக வருகின்றாள் இவளுக்குள்ளவர்கள் இங்கு சம்பாதித்து வைத்திருந்தால் எடுத்தேக வருகின்றாள்போலும் அடிசகி அவள் இங்குவாராமுன்னம் சீக்கிரமாகக் கதவைத்தாளிட்டு வருவாயடி.

சகி வசனம்.

சித்தப்படி செய்கின்றேனம்மா.

குலசேகரி வசனம்.

நமது அண்ணனுடைய வீட்டின்கதவு தாளிட்டிருக்கிறது. காரணம் ஏதோ அறிகிலேன்.

## குலசேகரி கதவைத்தட்டி அண்ணியையழைக்குந் தரு.

பராபரக்கண்ணி பாராயோ என்னைமுகம் என்றமெட்டு.

அண்ணியாரே அண்ணி அண்ணனார்தேவியே
அன்பாய் கதவைத்திறப்பீர் அண்ணி அண்ணி அ அ அன்பா
தமயன்அரண்மனையை உனதாயாளுந்தாயே
சமயங்கதவைத்திறப்பீர் சமயங்கதவைத்திறப்பீர் அஅஅ சம
தண்ணீர்தண்ணீரென்று தவிக்கின்றார்மைந்தர்கள்
தாகவிடாய்கொண்டு தாகவிடாய்கொண்டு அ அ
நெடுந்தூரமிருந்து நடந்துவந்தேன்மதனி
கடுககதவைத்திறப்பீர் கடுககதவைத்திறப்பீர்
அருமையென்பிள்ளைகள் அன்னமென்றழுகின்றார்
வருவாய்கதவைத்திறக்க வருவாய்கதவைத்திறக்க
நின்றகால்சோறுது நிலைதடுமாறுது
நன்றாய்கதவைத்திறப்பீர் அண்ணி நன்றாய்கதவைத்திறப்பீர்.

வசனம்.

நாம் இவ்வளவுநேரம் வருந்தியும் கதவுதிறக்கவில்லை இன்னமும் அழைத்துப்பார்ப்போம்.

நல்லதங்கை தரு.

குடிபிற்பிறந்தபெண்ணாள் கூவி பழைக்கின்றேனே
கடுகெனவோடிவந்து கதவைதிறப்பாய் அண்ணி
பாலமுதஞ்சோர்கொடுத்து பாங்குடனேநான்வளர்த்த
பாலர்பசிதணிக்க பரிந்தேதாள்திறப்பாய் அண்ணி
பிள்ளைகளைப்பாரும் அண்ணி பேதைநான்வருந்துகிறேன்
எள்ளளவுகருணைவைத்து இக்கதவைதிறவுமம்மா
வாயைத்திறப்பாயானால் வாய்முத்துதிர்ந்திடுமோ
சேலைப்பெறவில்லையோ சித்தமிறங்காததென்ன
எந்நேரமாயிங்கு இதம்பாடிநிற்பேனடி
உன்னெஞ்சங்கருங்கல்லோ உத்தாரஞ்சொல்லவில்லையே

வசனம்.

நாயின்னேரமும் காத்திருந்தும் கபாடந் திறக்கவில்லை இதுவது சூதோ அறிகிலேன்.



குலசேகரி கதவைத்திறக்கவைக்கும் விருத்தம்.

அத்திமா முகனையீன்ற அன்னமேல் சொக்கலிங்கம்
எத்திசை யோர்புகழும் என்னரும் நாதற்கேற்ற
பத்தினி நானேயாகில் பார்ப்பவர் அறிவதற்கு
சத்தியம் யிக்கதவு ஜடுதியில் திறக்கவேண்டும்.

குலசேகரி மாளிகையில் சயனித்திருக்கும்
அண்ணியானழுளியை எழுப்புதல்.
குலசேகரி ஒரு ஜவராசாமி என்ற வர்னமெட்டு.

அருமையெந்தன் அண்ணியாரே
அயர்ந்துநித்திரை கொள்வதேனோ
அருகாதவழிநடந்து அனுப்புடனேவந்தேனம்மா
அண்ணியாரேஎன்னகோபம் அல்லதென்னுமனஸ்தாபம்
அண்ணனெங்கேசென்றாரம்மா அன்புடனேபேசுமம்மா.

வசனம்.

மதனியே யெழுந்திருப்பீர் ஏன் இவ்வளவு மனவாட்டத்துடன் சயனித்திருக்கின்றீர் உமக்கென்னதீங்கேற்பட்டது மேலும் மௌனம் சாதிக்கின்றீரே என்மீதில் ஏதேனும் கோபமுண்டா அப்படியானால் ஏதாகிலும் குற்றம் ஏற்பட்டிருக்குமோ அம்மணீ இங்கு யென் அண்ணனுமில்லையே அதனால் உமக்கு மனவியாகூலமா தெரிவிப்பீர் அதிசீக்கிரமெழுந்து குழந்தைகளின் முகத்தைப்பாரும் அவர்கள்வந்த அலுப்பைத்தீர்ப்பீர் என்னை ரக்ஷிப்பீர் அம்மா என்ன நாமிவ்வளவு நேரம் வருந்தியழைத்தும் எழுந்திருக்க வில்லையே நம்மால் என்ன அபசாரம் நேர்ந்ததோ அறிகிலோம்.

பொது வசனம்.

குலசேகரி அண்ணியிடம் தெரிவித்திருக்கும்போது குழந்தைகள் கனிவர்க்கங்களை யெடுக்கக்கண்ட அலங்காரி எழுந்திருந்து உடனே பிள்ளைகளை அடித்தல்.



மூளி வசனம்.

அடே துஷ்ட சக்களத்திப்பெற்ற துன்மார்க்கப்பயல்களே

அலங்காரி தரு இ-ம் தன்யாசி, தாளம்-ஆதி.

எப்படித்தான்தாய்வயற்றில் யிருந்திரோபத்துமாதம்
இத்தனை பதட்டமாக
இப்படிக்கெல்லாம் செய்தால்
இடிப்பேன் பொடைப்பேன் துஷ்டா
எதற்கோநீங்கள்வந்தது யீனமானமற்றபிரஷ்டா (எ)
தேங்காயைத் தொடலாமா உன்கையை
நீயால் தகிக்கலாமா
ஆங்காரமோ அடா அடக்கமில்லாதபேயே
போங்காலமோயிக்கு பொறுச்கவந்தாய்நாயே (எ)

வசனம்.

வேசிமைந்தர்களே பிறர் வீட்டிலுள்ளபொருளை உத்திரவின்றி எப்படி எடுக்கலாமடா இவ்வளவு பதட்டமாக உன் தாய்வயற்றில் பத்துமாதம் எப்படியிருந்தீர் வந்தவழியைப்பார்த்து ஓடிப்போய் விடுவீர் கழுதைகளே.

பொது வசனம்.

இப்படி பலவிதம் வைத்து அடித்து எடுத்தகனிகளை தான் வாங்கிக்கொள்ள குழந்தைகள் தாயாகிய குலசேகரியிடந் தெரிவித்தல்.

குலசேகரிக்கும் குழந்தைகளுக்கும் தர்க்கம்.

ஐயோயிதற்கென் செய்வேன் என்ற வர்னமெட்டு.

குழந்தைகள்.

மாங்காயெடுத்தேனென்று அம்மணி
மாமி அடித்தனளே அம்மணி

குலசேகரி.

மாமன்வீட்டிற்குவந்து மைந்தர்களே
மாங்கனிதின்றல்பாபம் மைந்தர்களே

குழந்தைகள்.

அழுகினதேங்காயெடுத்தேன் அம்மணி
அடித்தாள்தவடையில்பாரும் அம்மணி

குலசேகரி.

க்ஷாமம்வந்ததால்நாமும் மைந்தர்களே
சம்பத்திழந்துவந்தோம் மைந்தர்களே

குலசேகரி.

வழுபிள்ளைகள்காக்கள் சர்வேசா
எங்கி தியங்கச்செய்தாய் ஜெகதீசா
தாழுரகாலமாச்சு பிராணேசா
தவிர்த்துவந்தேனுன்சொல்லை பிராணேசா

குலசேகரி வசனம்.

அடே ஞானசேகரா துக்கப்படாதே உன் பசிதீர அதி சீக்கிரத்தில் உங்கள் மாமியிடம் அன்னமிடும்படி சொல்லுகிறேன்.

## குலசேகரிக்கும் மூளி அலங்காரிக்கும் தர்க்கம்.

கண்ணிகள் தில்லைசந்திரி கல்பனை மெட்டு.

குலசேகரி தரு.

சொந்தமுடன்வந்தேனண்ணி சோர்ந்தார்மக்கள்பசியால்
சந்தோஷமாய்மைந்தருக்கே சாதந்தரல்வேண்டும்வேண்டும்

குலசேகரி வசனம்.

மதனியேமைந்தர் பசியால்வருந்துகின்றனர் மேலும் யானும் அண்ணன் வீடாச்சுதே யென்ற சொந்தத்தைப்பாராட்டி வந்ததினால் என்மக்களின் பசிதீர அன்னமளிப்பீர்.

## மூளி அலங்காரி தரு கண்ணிகள்.

அண்ணை அவளழகையென்ற வர்ணமெட்டு.

சீ சீ போடி.
என்னசொந்தம்போடியிங்கு அன்னங்கிடையாது
இந்நாட்டிலும்பஞ்சமுண்டு இங்கேதுக்குவந்தாய்

மூளி அலங்காரி வசனம்.

இங்கு உனக்கென்ன சொந்தமிருக்கிறது அப்படி ஒருவேளை உனக்கு சொந்தமிருந்தாலுங்கூட வாரியெடுத்துப் போகுவதற்கும் இங்கு ஒன்றுங்கிடையாது இந்த ஊரிலும் விசேஷபஞ்சம் எங்களுக்கே உண்ண உணவு கிடையாது உங்களுக்கு எங்கிருந்து கொடுப்பது சீ சீ வெளியில் போடி போ.

குலசேகரி தரு.

வந்தாலென்ன அண்ணியரே வருமைபிணியாலே
இந்தயிடம்வரலானோம் இரந்தேநாங்கள்பிழைக்கபிழைக்க

குலசேகரி வசனம்.

அம்மணி பஞ்சம் வாய்ந்ததால் இங்குவரலானோம் எம்மை நாம்தான் ஆதரிக்கப்படாதோ அம்மா.

மூளி அலங்காரி தரு.

கல்யாணத்தில்சீதனங்கள் கனமாய்கொடுத்தோமே
அடியேஅதைவிற்றுண்ணமல் அஞ்சாமலேவந்தாய்

மூளி அலங்காரி வசனம்.

எண்டியம்மா உன் கலி[illegible]த்தில் ஊமரல்லாம் விலைமதிக்கும் [illegible]வகள கொடுத்தோமே அதுகளெல்லாம் பாழாய்விட்டதா அதை விற்று தின்னப்படாதோ [illegible]ல்லாம் வீட்டில் அடைத்து வைத்து இன்னம் இருப்பது வாரியெடுத்துப்போக வந்தனையா இங்கொன்றுமில்லை போடி அம்மா போ.

குலசேகரி தரு.

எல்லாவிற்றுஉஜ்ஜீவித்தோம் இனிஒன்றுமேயில்லை [தோம்
பொல்லாப்பஞ்சம்வந்துற்றதால் பொருளனைத்துமிழந்தோம் இழந்

குலசேகரி வசனம்.

அண்ணியாரே சமஸ்தமும்விற்று ஜீவித்தோம் இனி கையில் ஒரு பொருளுமில்லை ஆகையால் உங்களை அண்டி காலங்கழிக்க வந்தோமம்மா.

மூளி அலங்காரி தரு.

போனதெல்லாம்போச்சியிங்கு பொழுதுபோகாமுன்னம்
நானளிக்கும்கூழையுண்டு நடப்பாய்இதைவி[illegible]த்து

மூளி அலங்காரி வசனம்.

சரி போனதெல்லாம் போகட்டும் உன்னைப்பார்த்தால் எனக்குதான் பரிதாபமாயிருக்கிறது. ஏதேனும் கொடுக்கலாமென்றால் என்னிடத்திலும் ஒன்றுங்கிடையாது இருந்தால் கொஞ்சம் கேழ்வாகு யிருக்கிறது அதனாலாவது கூழைக்காய்ச்சி யிடுகின்றேன் ஒருபக்கமிரும்.

குலசேகரி வசனம்.

அப்படியே ஓர்புரமிருக்கிறேன் அம்மா.

பொது வசனம்.

மூளி பச்சைவாழைமட்டைகளால் அடுப்பை யெரியவைக்கக் கண்ட குலசேகரி அக்கினிபற்றி யெரியும்படி உரைத்தல்.

குலசேகரி விருத்தம்.

சுந்தர அண்ணியார்க்கு சொல்லொணுகஷ்டமேனே
மைந்தர்கள்பசிதாளாமல் மண்மீதுசோருகின்ருர்
எந்தன் றன்கணவருக்கு ஈற்றனுன்தேவியாகில்
செந்தீயால்கதலித்துண்டு சீக்கிரமேயெரியவேண்டும்.

குழந்தைகள்.

பசிமிகவாகுது அன்னையே
பாச்சியாகிலும்தாரும் அன்னையே

குலசேகரி வசனம்.

யான் என் பதிக்கேற்ற பாவையாயின் என் மக்களின் பசிதீர இவ்வாழைமட்டைகள் சீக்கிரமாக யெரியவேண்டும் விசாலாக்ஷி.

குலசேகரி தரு.

அந்தகாருரிகியென்ற வர்னமெட்டு.

கொதிக்கும்கூழாகிலும் கொடுப்பாய்மதனியென

குலசேகரி வசனம்.

அம்மணி இக்கூழையாகிலும் சீக்கிரமாக குழந்தைகளுக்கிடுவீர் மைந்தர் வருந்துகின்ருர் தாயே.

மூளி அலங்காரி தரு.

இராகம் - அடாணு, தாளம் - ரூபகம்.

தூக்கிஉடைப்பேன் உன்தலைமீது இதை
தூருசெய்யவோநீ வந்தாய் (தூக்)
ஆக்கப்பொறுத்தவள் ஆறப்பொறுக்காமல்
அலைகுருய்போடிநீலீ அறிவுகெட்டநாரி (தூக்)
கள்ளிஉனக்கென்னபதட்டம் நீகதறிஞல்ஆருக்குநஷ்டம்
என்-உள்ளத்தின் சாக்ஷியாயிஷ்டம் இல்லை
உனக்கில்லையா பெருங்கஷ்டம்
பிள்ளையைசாக்கிட்டு பூதம்விழுங்கின
பேச்சுனக்கதகும் பேயேநீ நாயேசெல் (தூக்)



மூளி அலங்காரி வசனம்.

சக்காளத்திநாரி இதற்குள் உனக்கென்ன பதட்டமடி ஆக்கப் பொருத்தவள் ஆரய்பொருக்கப்படாதா மாசிபொறைகண்டால் தான் மண்ணிலிறக்குவேன் தைபொறை கண்டால்தான் தரையிலிறக்குவேன் பிள்ளைகளைசாக்கிட்டு பூதத்திற்குச் சமானமான நீ விழுங்க பார்க்கின்றாய்போல் காணுகின்றது. சீ சீ காநகி ஓடிச்செல் இங்கு நீ நிற்காமல் ஓடிப்போய்விடு இனி நிற்கில் உனக்குதகுமான பிராயச்சித்தம் யேற்படும் சென்றுவிடு ஓடிப்போங்களடா கழுதைகளா எங்கேயாவதுபோய் பிச்சையெடுக்கப்படாதா வண்டா இங்குவந்தீர் இனி யிங்கிருந்தால் உதைப்பேன்.

குலசேகரி வசனம்.

வுசியிடலின் இடாமையே நன்றெதிரின் பேதம் மனையாளிற் பேயும் நன்றென்ன ஔவையும், உப்போடு நெய்பால் தயிர்காயப் பெய்திடினும் கைப்பெருபேய்ச்சுரையின்காவென திருவள்ளுவரும் மொழிந்தவாக்கென்ன பழுதாகுமா—பிச்சையாகிலு மெடுத்து பிள்ளைகளைக் காப்பாற்ற ஊரிலென்ன பஞ்சமா? எனக்கும் என்மக்களுக்கும் இக்கதி வாய்க்குமா? இன்னம் அரைக்ஷணம் நிற்கதான் போகுமா ஆகையால்,

குலசேகரி சரிதை முதற்பாகம் முற்றிற்று.